Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 136-145 / ISSN: eISSN 2590-3691

ORIGINAL ARTICLE

# மாணிக்கவாசகர் மக்களுக்குக் கூறும் கருத்துகள்

# MANICKAVASAGAR'S MESSAGE TO THE PEOPLE

**ஹாஷினி ஜெய்சீலன் [1] / Ashini Jaiseelan [1]**
[/] தங்சோங் மாலிம், பேராக், மலேசியா / Tanjong Malim, Perak, Malaysia.
மின்னஞ்சல் / Email: ashini09@gmail.com

## Abstract

Saivism is the time when Lord Shiva was worshipped as the All Mighty Lord of all. He is known as one of the four saviours of Saivism who had reached the grace of the lord through his wiseness. He was born in the Brahmin family and served as the minister under the government of Ayymertha Pandian. Manikavasagar sacrificed his life for the Lord to when he was about to reach the end of his beloved livelihood. The 1058 songs he sang by the grace of the lord have been compiled in 76 editions. It is believed that when the other saints that sing his songs, it brings in the devotion of Manickavasagar himself. In addition, it is said that one who does not listen to such song will be influenced to listen. The article is written in order to examine his song in the sense of world life, pure love, the grace of God, the characteristics of the Lord, the non-existence of Him, the speciality of Tamil language and clear thoughts. In the songs of Manikavasagar, these concepts and messages are explained in a clear and simple manner to guide people's well-being.

**Keywords**: Manickavasagar, Thiruvasagam, worship

## ஆய்வுச் சாரம்

*சைவ சமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வணங்கப்படும் சமயமாகும். சைவ சமயக் குரவர்கள் நால்வருள் மாணிக்கவாசகர் ஞான மார்கத்தின் வழி இறைவனின் திருவடியை அடைந்தவராவர். அந்தணர் குலத்தில் பிறந்து அரிமர்த்தன பாண்டியன் என்ற அரசரது அமைச்சராகப் பணிப்புரிந்த இவர் சிவபெருமானின் பூரண அருளைப் பெற்றவர். அதன் பொருட்டுச் சிற்றின்ப வாழ்க்கையை விடுத்துப் பேரின்ப பலனை அடைய இறைத் தொண்டிற்கென தனது வாழ்வை அற்பணித்தவர் மாணிக்கவாசகர். சிவனருளால் அவர் பாடிய 1058 பாடல்களும் 76 பதிகங்களாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. அவர் பாடிய*

திருவாசகத்தைப் பாடுவோரும் சிவமாகிவிடுவர் என்பதை, 'தொட்டாரைச் சிவமாக்கும் திருவாசகம்' என்கிறார். அதுமட்டுமில்லாமல், 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பர். அவரது பாடலை ஆராயும் நோக்கில் எழுதப்பட்ட அவ்வாய்வுக் கட்டுரையில் உலக வாழ்க்கை நிலையாமை, தூய அன்பு, இறைவனின் கருணை, இறைவனின் பண்புகள், அவனன்றி ஓரணுவும் அசையாது, தமிழின் சிறப்பு, தெளிந்த சிந்தனை மற்றும் வீடுபேறு முதலிய கருத்துகள் விளக்கப்பட்டுள்ளன. மாணிக்கவாசகரின் பாடல்களில் இந்தக் கருத்துகளில் மக்களின் நல்வாழ்விற்கு வழிவகும் வகையில் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கப்பட்டுள்ளது.

***கருச்சொல்:*** *மாணிக்கவாசகர், திருவாசகம், வழிபாடு*

## *முன்னுரை*

*சைவ சமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வணங்கப்படும் சமயம். இச்சமயம் உலகில் தோன்றிய பல சமயங்களுள் மிகவும் தொன்மையானது. இத்தகைய சமயத்தில் சிவநெறியை வளர்க்கப் பல அருளாளர்கள் தோன்றினர். அவர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமயக்குரவர்கள் நால்வரும் மிக முக்கியமானவர்கள். இவர்கள் நால்வரும் போற்றிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நெறிகளும் சைவ சமயத்தின் பக்தி நெறியின் அடிப்படை ஆகும். இவர்கள் நால்வர்கள் காட்டிய நெறிகள் இன்றளவும் பக்தர்களுக்கு இறைவனின்பால் தூய்மையான பக்தியையும் அவனின் திருப்பாதத்தை அடைய ஒரு தூண்டு கோளாக அமைகின்றது என்றால் அதில் கடுகளவும் ஐயமில்லை. ஆனால், அந்நால்வருள் மாணிக்கவாசகப் பெருமானின் தியாகமும், பக்தியும், அன்பும் மிகவும் சிறப்புடையதாகவும் மெய்சிலிர்க்கும் வகையிலும் அமைந்துள்ளது (கார்த்திகேஸ் பொன்னையா, 2015)*[1] .

*மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டில் திருவாதவூர் எனும் ஊரில் சைவ அந்தணர் குலத்தில் பிறந்தவர். எப்பொழுதும் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்தவாறே இருப்பவர் மாணிக்கவாசகர். இவர் தனது பதினான்கு வயதிலேயே கல்வி கேள்வி, ஒழுக்கம், ஆற்றல், அறிவு ஆகியவற்றில் வல்லவராய்த் திகழ்ந்தார். தருக்க நூல், தரும நூல், சமய நூல், அரச நீதி நூல் எனப் பலவற்றையும் கற்றுத் தேர்ந்தவராய் இருந்தார். இவரின் பெருமையைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பண்டியன் எனும் மன்னன் மாணிக்கவாசகரை அவனது தனது அமைச்சராக நியமித்தான்.*

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 136-145 / ISSN: eISSN 2590-3691

*ஒருமுறை அரசனின் பொருட்டுக் குதிரை வாங்கத் திருப்பெருந்துறைக்குச் சென்ற மாணிக்கவாசகரிடையே சிவபெருமான் திருவிளையாடல் ஒன்றினை நிகழ்த்த விரும்பினார். அதன்பொருட்டுக் குருந்த மரத்தடியில் இறைவனே ஞானாசிரியராக வெளிப்பட்டு மாணிக்கவாசகருக்குப் போதனையும் வழங்கினார். சிவப்பெருமானின் விருப்பம்போலவே மாணிக்கவாசகரும் சிவனன்பு உச்சம் பெற்று வந்தப் பணியினை மறந்து அவ்வூரிலேயே தங்கி விட்டார். அதுமட்டுமின்றி, பாண்டிய மன்னன் தன்னிடம் குதிரைகள் வாங்கக் கொடுத்தனுப்பியப் பொன்கள் யாவையும் கோயில் கட்டவும் இறைப்பணிக்காகவும் செலவளித்தார். இறையன்பில் தன்னையே மறந்திருந்த மாணிக்கவாசகருக்கு ஒரு நாள் பாண்டிய நாட்டிலிருந்து ஓலை ஒன்று வர தான் வந்த நோக்கத்தை மறந்து இறையன்பில் மூழ்கியிருந்ததை உணர்ந்தார்.*

*குதிரைகள் வாங்க மன்னன் அளித்த பொன்கள் அனைத்தையும் கோயில் திருப்பணிக்கென செலவு செய்துவிட்ட்தையறிந்த பாண்டிய மன்னனால் சில தண்டனைகலுக்கும் ஆளானார். அப்போது இறைவன் நரியைப் பரியாக்கியும் பரியை நரியாக்கியும் பிட்டுக்கு மண்சுமந்தும் சில திருவிளையாடல்களைச் செய்து அடியார் பெருமையை இவ்வுலகிற்கு உணர்த்தினார். இறுதியில் இறைவனின் இணையடி நிழலை அடைந்தார் (ஆதிரையர், 2003)[2].*

*மாணிக்கவாசகர் இயற்றிய பாடல்கள் யாவும் 8-ஆம் திருமுறையாகத் தொகுக்கப்படுள்லது. இவர் பாடிய 1058 பாடல்களும் 76 பதிகங்களாகத் தொகுக்கபெற்றுள்ளன. அவை, திருவாசகம் மற்றும் திருக்கோவையார் ஆகும். திருவாசகம் மாணிக்கவாசகர் இறைவனை நினைத்து அழுது அழுது பாடியதாகும். மாணிக்கவாசகர் தன்னையும் சிவனையும் வேறாகக் கருதவில்லை. அவர் சிவனையே எண்ணி எண்ணி இறுதியில் சிவமாகிவிட்டார் என்பதே உண்மை. ஆகையாலே, அவர் பாடிய திருவாசகத்தைப் பாடுவோரும் சிவமாகிவிடுவார் என்பதை, 'தொட்டாரைச் சிவமாக்கும் திருவாசகம்' என்கிறார். அதுமட்டுமில்லாமல், 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பதும் குறிப்பிடத்தக்கது (கார்த்திகேஸ் பொன்னையா, 2016)[3].*

*மேலும், இவருக்குச் சிவபெருமான் மேல் இருந்த அதீத பக்தியின் பொருட்டுத் தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் உருவகப்படுத்தி திருவெம்பாவை எனும் அற்புத பாடலையும் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் தன் பாடல்கள் மூலம் இறைவன்பால் தான் வைத்திருந்த பக்தியை வெளிப்படுத்தியது மட்டுமில்லாமல் அதன் மூலம் மக்களுக்குத் தேவைப்படும் பலக் கருத்துகளைக் கூறியுள்ளார். அவை அனைத்தும் மக்களின் மனதில் இருக்கும் குழப்பத்தை அகற்றி இறைவன் மீது தூய அன்பினையும் உண்மையான பக்தியினையும் செலுத்த பெரிதும்*

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 136-145 / ISSN: eISSN 2590-3691

துணைப்புரிகிறது. அவ்வகையில், மாணிக்கவாசகர் மக்களுக்குக் கூறுவனக் குறித்துக் இக்கட்டுரை அமைகிறது (வரதராசன், 2009)[4].

**உலக வாழ்க்கை நிலையாமை**

திருப்படையெழுச்சி எனும் கீழ்க்காணும் பதிகப்பாடல் மாணிக்கவாசகரால் தில்லையில் அருளப்பட்டது. உலகம் எனும் மாயையை வெல்வதற்குச் செய்யும் செயல்கள் யாவையும் பிரபஞ்ச போர் எனலாம். அம்மாயையைப் போரிட்டு வெல்ல தொண்டர்கள் படைவீரர்களாகக் கருதப்படுகின்றனர். ஆகையாலே இப்பதிகம் திருப்படையெழுச்சி எனப்பட்டது.

*'ஞானவாள் ஏந்தும் நாதப் பறையறைமின்*
*மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவின்மின்'*
*(திருவாசகம் - 46, பாடல் எண் 1)*[5]

இவ்வாறு தொடங்கும் இப்பாடல் வரிகளின் வழி, உலகம் எனும் மாயையை வெல்வதற்கு நாம் என்னென்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதை மாணிக்கவாசகர் நமக்கு உணர்த்தியுள்ளார். போருக்குச் செல்லும் வீரர்கள் எவ்வாறு பறையை அடித்துக்கொண்டு, கவசம் பூண்டு, எதிரிப்படையை வெல்கின்றனர். அதேப் போன்று நாமும், பிரணவ நாதமாகிய பறையை அடித்துக்கொண்டு, தொண்டர்களைப் படைவீரர்களாகவும், இறைவனைப் போர்த்தலைவனாகவும், சிவலோக ஆட்சியே படையெழுச்சியின் பயனாகவும் உணர வேண்டும்.

இதில், வாளை ஞானமாகக் குறிக்கிறார் மாணிக்கவாசகர். காரணம், இறைவனின் திருவடியை அடைய வாளைப் போன்று நமது ஞானமும் கூர்மையாக இருத்தல் வேண்டும் என்பதை உணர்த்தவே ஞானத்தை வாளோடு ஒப்பிடுகிறார். ஞானம் என்பது தெளிந்த அறிவைக் குறிக்கும். எந்தவொரு குழப்பமுமின்றி தெளிந்த அறிவுடன் இறைவழிப்பாட்டை மேற்கொள்வதன் வழி இறைவனின் திருவடியை அடையும் பாக்கியம் வெகுவிரைவில் நமக்குக் கிட்டும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

மேலும், தியானத்தை வெண்கொற்றக் குடையாகவும், திருநீற்றைக் கவசமாகவும் குறிக்கிறார். பல ஆயுதங்கள் இருக்கும் நிலையில் திருநீர் ஏன் கவசமாகக் கருதப்படுகிறது? திருநீரானது பல அற்புதத் தன்மைகளை உடையதாகும். சமயக்குரவர்கள் நால்வருள் ஒருவரான திருஞானசம்பந்தர் அவர்கள் திருநீற்றின் சிறப்பினையும் ஆற்றலையும் இவ்வுலகிற்கு எடுத்துரைத்ததை இரண்டாம் திருமுறையில் 66-ஆம் பதிகத்தில் (திருநீற்றுப் பதிகம்) காணலாம். மேலும், இன்று இருக்கும் ஒரு பொருள் நாளை அழியக்கூடியது. இதன்பொருட்டு, திருநீர் உலக

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 136-145 / ISSN: eISSN 2590-3691

*நிலையாமைக்கு ஒரு சின்னமாகவும் விளங்குகிறது. ஆகவே, நிலையில்லா இப்புவி வாழ்வதனில் என்றும் நிலைத்திருக்கக் கூடியவர் இறைவன் மட்டுமே. ஆக, திருநீரானதை அணியும் போதெல்லாம் உலக வாழ்க்கை நிலையற்றது என்றும் நிலைத்திருக்கக்கூடிய இறைவனை அடையும் செயல்களைச் செய்வதிலேயே நம் சிந்தை இருக்க வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துகிறது. அந்நிலையில், திருநீறானது பேரின்பத்தை அடையும் நோக்கில் சென்றுக்கொண்டிருக்கும் நமது சிந்தனையைச் சிற்றின்பத்தின் பக்கம் திரும்புவதை தடுக்க ஒரு கவசமாக விளங்கக்கூடியது என்பதையும் இப்பாடலின் வழி மக்களுக்கு உணர்த்துகிறார் மாணிக்கவாசகர்.*

**தூய அன்பு**

*47-ஆவது பதிகப்பாடலானத் திருவெண்பா எனும் இப்பதிகம் திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகரால் அருளப்பெற்றது ஆகும்.*

*'வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்*
*பொய்யும் பொடியாகா தென்செய்கேன் – செய்ய'*
*(திருவாசகம் 47 , பாடல் எண் 1)* [5]

*இப்பாடலின் மூலம், இறைவன் மீது தூய்மையான அன்பைச் செலுத்துபவர்களுக்கு என்றும் அவர் இன்பத்தையே தருவார். அதுமட்டுமின்றி, இறைவனை வணங்கும் போது தூய அன்பினையையே வெளிப்படுத்த வேண்டும். அலட்சியமாகவோ நிபந்தனையின் அடிப்படையிலோ செலுத்தப்படும் அன்பு அர்த்தமற்றது. ஆகவே, தூய அன்புடன் இறைவனை வழிப்படுபவர்கள் இப்புவி வாழ்வை விடுத்து இறைவனின் திருவடியைச் சென்றடைவர் என்பதனையும் இந்தப் பாடல் வழி மக்களுக்கு உணர்த்துகிறார் மாணிக்கவாசகர்.*

*இங்குத் தூய அன்பெனப்படுவது யாது? ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறுவது அல்ல. எந்தவொரு எதிர்ப்பார்ப்புமின்றி வெளிக்காட்டப்படும் அன்பே தூய்மையானதாகக் கருதப்படுகிறது. பக்தர்கள் ஆகிய நாம் அவ்வாறான அன்பையே இறைவன்பால் வைத்திருக்க வேண்டும். ஆனால், இன்றைய நிலையில் பார்க்கும்பொழுது, பக்தர்களிடையே தூய அன்பைக் காட்டிலும் எதிர்பாப்பும் கொடுக்கல் வாங்கல் குணமும் தான் நிறைந்து வழிகின்றது. சான்றாக, இறைவனிடம் தேவாரம் எனப்படும் பாட்டால் ஆன மாலையைச் சூட்டுபவர்களைக் காட்டிலும், இதைப் பாடினால் எனக்கு இந்தத் தேவை பூர்த்தியாகும், "நான் உனக்குப் பாடல் பாடுகிறேன் நீ நான் கேட்டதை எனக்குத் தா..!!", என இறைவனிடமே கொடுக்கல் வாங்கல் வியாபாரம் செய்பவர்களே அதிகம் காணப்படுகின்றனர். இவ்விடத்தில் தூய அன்பு எனப்படுவது வெளிப்படுவதில்லை. மாறாக, இன்னுமும் இறைவனைச்*

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 136-145 / ISSN: eISSN 2590-3691

சரணடைய வேண்டும் என்ற பேரின்ப நிலையை எண்ணாமல் சிற்றின்பத்தையே வாழ்வின் பேரின்பமாகக் கருதி அதனைத் தழுவிய நிலையிலேயெ பலர் உள்ளனர். இவர்களுள் உண்மையான பக்தர்கள் சிலர் மட்டுமே விதிவிலக்கு.

ஆகவே, இத்தகைய அறியாமை நிலையிலிருந்து நீங்கி தூய அன்பினால் இறைவனை வணங்குதல் வேண்டும் என்றக் கருத்தினையும் அவ்வாறு செய்வதன் மூலம் இறைவனே பக்தர்களுக்கு வேண்டியதைத் தருவார்; மகிழ்விப்பார் என்பதனையும் மக்களுக்குக் தன் பாடலின் வழி கூறுகிறார் மாணிக்கவாசகர்.

**இறைவனின் கருணை**

திருச்சதகம் திருவாசகத்தில் 5-ஆவது பதிகமாகும். இப்பதிகம் 100 பாடல்களைக் கொண்டது. திருச்சதகம் என்பது இறைத்தன்மையுடைய 100 திருப்பாட்டுகளைக் கொண்ட ஒரு தொகுதி எனப் பொருள்படும். பத்துச் செய்யுள்கள் ஒருவகை யாப்பாக, பத்து வகை யாப்புகளால் அந்தாதியாக இத்திருச்சதகம் அருளிச் செய்யப்பட்டது. இப்பதிகப்பாடலில் இறைவனின் மேன்மை, சிறப்பு போன்றவற்றைக் கூறி அகவுதல் (அழைத்தல்) ஆகும்.

*'பேசிற்றாம் ஈசனே எந்தாய் எந்தை*
*பெருமானே என்றென்றே பேசிப் பேசிப்'*

*( திருவாசகம் 05, பாடல் எண் 24)*[5]

மேற்கண்ட வரிகள், இறைவனை நோக்கி மாணிக்கவாசகரால் பாடப்பட்டவை ஆகும். பேசும்போதெல்லாம் இறைவனின் நாமத்தை உச்சரித்தவண்ணமும் எந்நேரமும் நெற்றி முழுக்க திருநீற்றைப் பூசிய வண்ணமுமாகத் தன் சிந்தை முழுக்க இறைவனையே நினைத்துக் கொண்டிருக்கும் உயிர்கள் பல. அத்தகைய சிறப்புமிக்க உயிர்களுக்கு அருள் புரிபவரே இறைவன். அத்தகைய இயல்பினை உடையவர் அன்பில்லாத எனக்கும் அருள் புரிவது வியக்கத்தக்க செயலாகும் என்பதே இப்பாடலின் பொருளாகும்.

இதன் வழி இறைவன் உயிர்கள் மீது அன்பு வைத்திருப்பவர் என்பதையும் கருணை உள்ளம் படைத்தவர் என்பதையும் அறிய முடிகிறது. ஆனால், மனிதன் என்பவன் எதைச் செய்தாலும் அதிலிருந்து ஓர் ஆதாயம் தேடுபவன். ஒரு செயலை செய்வதற்கு முன், அதைச் செய்தால் நமக்கு என்ன கிடைக்கும் என்பதை திட்டம் போட்டுச் செய்பவன் ஆவான். மேலும், தன்னை மதிக்காத ஒருவரைத் தானும் ஒரு பொருட்டாகவே கருதாமல் இருப்பது மனித குணம். ஆனால், கருணையே உருவமாகிய இறைவனோ, தன்னை வணங்கா உயிர்களுக்கும் கருணை காட்டுபவர். அவன் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து நிற்பவர். அதுமட்டுமின்றி, எந்தவொரு

எதிர்ப்பார்ப்புமின்றி உயிர்கள் அனைத்திற்கும் அருள்பாலிப்பவரே ஆதியும் அந்தமும் இல்லா அவ்விறைவன் என இப்பதிகப் பாடலின் வழி மக்களுக்கு உணர்த்துகிறார் மாணிக்கவாசகர்.

மேலும், அச்சோப் பதிகத்தின் வாயிலாக,

'முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்'

(அச்சோப் பதிகம்)[5]

எனத் தொடங்கும் வரிகளின் வாயிலாக, இறைவன் என்பவன் மானிடராகிய நம்மில் இருக்கும் மாசுகளை அகற்றித் தூய்மை செய்ய வல்லவன் எனக் கூறுகிறார் மாணிக்கவாசகர். மேலும், வீடுபேறு பெரும் வழியை அறியாமல் மூர்க்கரோடு கூடியிருந்த எனக்குப் பத்தி வழியைக் காட்டி, அறிவைப் பற்றியுள்ள மூம்மமலங்களைப் போக்கி என்னை ஆண்டருளினார் என் தந்தையான சிவபெருமான் என அவரை வியந்து பாடுகிறார் மாணிக்கவாசகர். மேலும், இறைவனின் நாமத்தைக் கூறுவதினாலும் இறை சிந்தனையில் தன்னை ஈடுப்படுத்திக்கொள்வதினாலும் மனத்தினில் இருக்கக்கூடிய மாசுகள் நீங்கி மனம் தூய்மையடையும். இதன்வழி, இறைவன் என்பவன் மனிதனின் பொறுபற்ற குணத்தினைக் கருத்தில் கொள்ளாது உரிய நேரத்தில் நம்மை தடுத்தாட்கொள்வார். இதுவே, இறைவனின் இயல்பு. ஆக, இறைவன் என்பவர் அத்தகைய கருணை உள்ளம் நிறைந்தவர் என்பதை மாணிக்கவாசகர் தனது இந்தப் பதிகப்பாடலின் மூலம் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

## தெளிந்த சிந்தனை மற்றும் வீடுபேறு

தெளிந்த சிந்தனை என்பது மனதில் எந்தவொரு சந்தேகமும் குழப்பமும் இன்றி சிந்தனையை ஒரு குறிப்பிட்ட பொருளின்பால் நிலைப்படுத்தி வைப்பதாகும். வீடு பேறு என்பது இறைவனின் திருவடியைச் சென்றடைதலைக் குறிப்பதாகும். ஆசைப்பத்து எனும் இப்பதிகப்பாடல் மாணிக்கவாசகரால் திருப்பெருந்துறையில் அருளியது ஆகும். இப்பதிகம் இறைவனின் திருவடியைச் சென்றடைய ஆவலுற்றதையை அருளிச் செய்த திருப்பதிகமாகும்.

'மிடைந்தெலும் பூத்தைமிக் கழுக்கூறல்
வீறிலி நடைக்கூடந்'

(25-ஆவது பதிகம், பாடல் எண் 4)[5]

என்று தொடங்கும் இப்பாடல் இப்புவி உடம்பினால்தான் உயிர்களுக்குத் துன்பம் நிகழுகின்றன. ஆகையால், மனமுருகி இறைவனின் அருள் ஒளியைக் கண்டு அவனது திருவடிகளை அடைய விரும்புவதன் பொருட்டுப் பாடப்பட்டுள்ளது. இதன்வழி, மனம் உருகி இறைவனை வணங்குதலே அவனின் திருவடியை அடைவதற்கு

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 136-145 / ISSN: eISSN 2590-3691

மற்றுமொரு வழி என்பதை உணர முடிகிறது. இதன் மூலம் பக்தர்கள் ஆகிய நாம் இறைவனை வணங்கும் போது மனதில் எந்தவொரு குழப்பமும் மாசும் இன்றி தெளிந்த சிந்தையுடன் மனமுருகி முழுப் பக்தியுடன் இறை வழிப்பாடு செய்வதன் மூலம் நாமும் வீடுபேறு பெறலாம் என்பதனை இப்பாடலின் மூலம் நாம் அறிய முடிகிறது. மேலும், இறைவனை அடைய எண்ணுவதே நம் ஆன்மாவின் இயற்கை எனவும் விருப்பம் எனவும் இப்பதிகப் பாடலின் வழி நமக்குணர்த்துகிறார் மாணிக்கவாசகர்.

## இறைவனின் பண்புகள்

கீழ்க்கண்ட பாடல் வரிகள் திருவாசகத்தின் முதல் பதிகப்பாடலான சிவபுராணத்தில் இடம்பெற்ற சில வரிகள் ஆகும். இவ்வரிகளையும் இதைத் தொடர்ந்து வரும்வரிகளையும் நன்கு உய்த்துணர்ந்து பாடும்போது மாணிக்கவாசகர் நமக்குக் கூற வரும் கருத்தினை நன்கு அறியமுடிகிறது.

*'நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்*
*பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே'*
*(திருவாசகம்: பதிகம் 1)*[5]

பொறாமை, வஞ்சனைப் போன்ற சில நற்சிந்தனைகளுக்கு முரணான சிந்தனைகள் யாவையும் கொண்டிருப்பது மனித இயல்புகளே ஆகும். மேற்கண்ட பாடல் வரிகள், பக்தர்களின் மனத்திலுள்ள வஞ்சனை எனும் தீய குணத்தை விலக்கும் நோக்கில் இறைவனானவன் அம்மனத்தினை விட்டு நீங்காது பெருங்கருணைக் கடலாகியும் அளவிடமுடியாத இன்பப் பொருளாகியும் அங்குக் குடிக்கொண்டிருக்கிறான். அப்பொழுது அந்தப் பக்தனின் மனமாகியது நீராய் உருகுகிறது. அவ்வாறு உருகிய உயிரை இறைவன் தன்மயமாகச் செய்கின்றான். இக்கருத்துகளை விளக்கவே,

*'நெஞ்சில் வஞ்சங்கெட நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே'*
*(திருவாசகம்: பதிகம் 1)*[5]

என்று மாணிக்கவாசகரால் பாடப்பெற்றுள்ளது. இதன் பொருட்டு இறைவன் என்பவன் தன்னை மனமுருகி வழிப்படும் பக்தர்களை என்றும் கைவிடமாட்டார் என்பதையும் உரிய நேரத்தில் நம்மை தடுத்தாட்கொள்வார் என்பதையும் நன்கு அறிய முடிகிறது.

*'இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே'*
*(திருவாசகம்: பதிகம் 1)*[5]

என்ற வரிகள் இன்ப துன்பத்தைக் கடந்தவர் பரம்பொருள். இருப்பினும், தனது அடியவர்கள் அனுபவிக்கும் இன்பதுன்பத்தில் தானும் பங்கெடுத்துக்கொள்கிறான். இதன்வழி இறைவன் என்பவன் உயிர்களினூடே ஊடுருவி ஒன்றோடு ஒன்று

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 136-145 / ISSN: eISSN 2590-3691

கலந்திருப்பவன் என்பதையும் நன்கு அறிய முடிகிறது. மேலும், இறைவன் என்பவன் எல்லாப் பொருளிலும் கலந்திருத்தலால் "யாவையுமாய்" தன்மையால் வேறாதலால் "அல்லனுமாய்" இருக்கிறான். ஒளியும் இருளும் அவனன்றி இல்லை என்பதால், "சோதியனே, துன்னிருளே" என்றார். இறைவனது உருவத்தைக் கண்ணால் காண முடியாது, அறிவினாலும் அறிய முடியாது என்பார், "நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணுணர்வே" என்றார். அனுபவத்தினால் காணக்கூடியவன் இறைவன் என்பதை உணர்த்த, "சிந்தனையுள் ஊற்றான உண்ணார் அமுதே" என்றார். உயிர்களின் மனப்பக்குவத்திற்கேற்ப இறைவன் அருளுவதை விளக்க, "மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம் தேற்றனே" என்றார். இத்தகைய திருவரிகளின் மூலம் மாணிக்கவாசகர் சிவபெருமானின் பண்புகளை மக்கள் உணரும்படி பாடியுள்ளார்.

### அவனன்றி ஓரணுவும் அசையாது

சிவபெருமானின் வடிவத்தைப் போற்றுவது ‘திருவண்டப் பகுதி’ ஆகும். இப்பதிகத்தில் இறைவன் என்பவர் பெரியதில் பெரியவர் எனவும், சிரியதில் சிறியவர் எனவும் அவனது வடிவத்தைப் போற்றியுள்ளார் மாணிக்கவாசகர். அதாவது, இவ்வுலகில் உள்ள அனைத்துப் பெரியப் பொருட்களைக் காட்டிலும் இறைவனே பெரியவன் எனவும் உலகின் மிகச் சிறிய நுண்ணியப் பொருட்களைக் காட்டிலும் இறைவன் என்பவர் சிறியவர் எனவும் பொருள்படும். இதன் மூலம், இறைவன் என்பவர் அனைத்திற்கும் அப்பார்ப்பட்டவர் என்பதையும் கற்பனைக்கு எட்டா வண்ணம் இருப்பவர் என்பதையும் நாம் அறியலாம்.

‘படைப்பாற் படைக்கும் பழையோன், படைத்தவை
காப்போற் காக்கும் கடவுள், காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள்’

(திருவண்டப் பகுதி : 13-16)[5]

இப்புவியில் அனைத்தையும் படைக்கும் பிரம்மாவை படைத்தப் பழையவன் எனவும், இவ்வுலகில் வாழும் உயிர்களை காக்கும் திருமாலை காப்பவன் எனவும் காக்கப்பட்ட பொருளை அழிப்பவன் எனவும் இறைவனைக் குறிப்பிடுகிறார் மாணிக்கவாசகர். இப்பாடலின் வழி உலகின் ஒவ்வொரு அசைவும் இறைவனின் விருப்பதின் அடிப்படையிலேயே இயங்குகிறது. ‘அவனின்றி ஓரணுவுன் அசையாது’, என்ற செய்தியை மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு இப்பாடல் வரிகளை இயற்றியுள்ளார் மாணிக்கவாசகர்.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 2- Issue 2 (2018), Pages 136-145 / ISSN: eISSN 2590-3691

***தமிழின் சிறப்பு***

*பொதுவாகச் சைவ சமயக் குரவர்களின் பாடல்களுள் தமிழுக்கென உயர் தனி இடம் இருப்பதைக் காணலாம். 'இன்தமிழ்', 'செந்தமிழ்', 'சம்பந்தன தமிழ்' என்றெல்லாம் தமிழைப் போற்றுகின்றார் ஞானசம்பந்தர். அப்பரோ, 'தமிழோடிசைப் பாடல் மறந்தறியேன்' என்று நவில்கிறார். சுந்தரரோ, 'தமிழோடு இசை கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர்' என்று தமிழைப் பாடுகிறார். இவர்களைப் போன்றே மாணிக்கவாசகரும் திருக்கோவையாரில், 'கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்' என்று பாடித் தமிழைப் போற்றுவதைக் காணலாம்.*

***முடிவுரை***

*மேற்கண்ட பாடல்வரிகள் யாவும் இறைவனின் திருவடியைச் சரணடைய நமக்குப் பெரிதும் துணைப்புரிகிறது. சமயக் குரவர்கள் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசகர் திருவாசகம் மற்றும் திருக்கோவையாரைப் பாடியுள்ளார். தனது பதிகப் பாடல்களின் மூலம் மக்களுக்கு இறையருள் கிடைக்கும் பொருட்டுப் பல அரிய கருத்துகளைக் கூறியுள்ளார். அவரின் பாடல்களைப் பாடி அதனுள் இருக்கும் கருத்துக்கள் யாவையும் உய்த்துணர்வதன் மூலம் இறைவனின் திருவருளை நாம் பரிபூரணமாகப் பெறலாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.*

***மேற்கோள் நூல்கள்:***

1. Kartheges Ponniah. (2015). *Introduction to Bakthi literature: Bakti Neri (பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம்: பக்தி நெறி)*. Perak: Muhibah Publication.
2. Atiraiyar. (2003). *Periya Puranam stories (பெரியபுராணக் கதைகள்)*. Chennai: Swamimalai Publication.
3. Kartheges Ponniah. (2015). *Thirumurai thought (திருமுறைச் சிந்தனைகள்)*. Perak: Muhibah Publication.
4. Varatarasan, M. (2009). *Tamil literature history (தமிழ் இலக்கிய வரலாறு)*. Chennai: Skathiya Academic.
5. Varatarajan, G. (1995). *Thiruvasagam (திருவாசகம்)*. Chennai: Palaniyappa Brothers.